ஓம் சரவணஜோதியே நமோ நம

ஆசான் அரங்கமகா ஞானியரின் அருளாசி நூலிலிருந்து
விசுவாவசு ஆண்டு சித்திரை திங்கள் சித்ராபௌர்ணமி நன்னாளாம்
இந்த நாளில் ஓங்காரக்குடிலின் நிகழ்விற்கும் ஓங்காரக்குடிலின் விழா சிறப்பிற்கும்
அன்னதானத்தின் பெருமைக்கும் தொண்டர்களுடைய மகிமைக்கும் உண்டான
பொது ஆசி நூல் விளக்கம்

**ஆசான் அரங்கமகா ஞானியரின் பொது ஆசி நூல் விளக்கம்**

12.05.2025

1. அருள் வடிவாக நின்று காத்தருளும்
ஆறுமுகப் பெருமானை தொழுதேற்றி
வரமென அரங்கமகா ஞானியர் யானும்
வழங்குவேன் விசுவாவசு ஆண்டு சித்திரை திங்கள்

2. சித்ரா பௌர்ணமி விழா குறித்த
ஆசி விளக்கம் தன்னை
அரங்கன் யானும் இதுகாலம்
என் தொண்டர் பெருமக்கள் மகிழவும்

3. ஓங்காரக்குடிலின் நிர்வாகமும் தர்மமும் சிறக்கவும்
வரும் அன்பர்கட்கெல்லாம் நல்வரம் பெருகவும்
அரங்கன் யான் அருளாசி தருகின்றேன்
அப்பனே முழுமதி இவை நன்னாளில்

4. ஞானியர்கள் படைகளெல்லாம் ஓங்காரக்குடிலில்
முன்னதாகவே வந்து குடியேறியிருக்க
மக்கள் படைகள் நாலா திசையிலிருந்தும்
அளவிலா வண்ணம் வருகை புரிந்து

5. அவரவர்க்கும் குடிலின் முகப்பை
தொட்ட உடனேயே அவர்கட்கெல்லாம்
வினை நீக்கத்திற்கு உண்டான
பேரற்புதம் நிகழ்ந்து கொண்டிருக்க

6. குடிலின் அரங்கன் என் ஜோதி வழிபாட்டோடு
குடிலின் அருளமுது உண்ட மக்களுக்கெல்லாம்
இனி பிறவாத பெரும்பேறு
இந்த விழாவின் சிறப்பாக உண்டு உண்டு

7. வகைபட என் தொண்டர் பெருமக்களெல்லாம்
வல்லமைபட மனமுவந்து சேவையாற்ற

நிர்வாகத்திலும் பூரண சரணாகதியாய்
தர்மத்தின் சேவையே பிரதான சேவையாக

8. மிக சிறப்போடு இந்த விழாவை எடுத்து வர
இந்த விழாவில் அருளமுதில்
அரங்கனொடு மகா சக்திகளெல்லாம் கலந்து
அமுதிலும் சுவையும் ஆற்றலும்

9. அருமருந்தாக ஆக்கமும் தந்து அருள்புரிகின்றேன்
அன்னதனால் இந்த விழாவில்
இப்பெரும் நன்னாளில் உலகமகா சக்திகளும்
ஓங்காரக்குடிலுக்கு இன்னும் பலம் சேர்க்கும் வண்ணம்

10. குடில் தொண்டர்கட்கு இன்னும்
மனபலம் தருகின்ற வண்ணம்
நிர்வாகத்திலும் அங்கத்தினர்கட்கெல்லாம்
எந்த சோர்வும் சோடையும் வாராத வண்ணம்

11. பெரும் பாதுகாப்பு கூட்டி
தர்மத்திற்கு எக்காலமும்
தனபுழக்கங்கள் தாராளமாய்
இருக்கும் வண்ணம் தர்மத்திற்கு

12. எந்த சூழலிலும் பற்றாக்குறை
வாராத வண்ணம் அரங்கன் யான்
இந்த நன்னாளில் வரம் தந்து
அருள் புரிகின்றேன் அற்புதம்பட

13. ஜோதியில் சூட்சுமங்களும் நிகழ்த்தி வருகின்றேன்
என்பால் சரணாகதி கொண்ட எல்லா மக்களுக்கும்
இந்த நன்னாளில் பூரணமான
ஆரோக்கியம் ஆயுள் பலம்

14. தேகபலம் மனபலம் அவர்கள்
விரும்பி வேண்டி வருகின்ற
அனைத்து காரியங்கட்கும் சித்தியும்
வரமும் தந்து அருள்புரிகின்றேன்

15. அன்னதனால் இவை நன்னாளில்
வந்து பாதுகாப்பாய் செல்கின்ற
வெளியூர் வெளிநாடு மக்களுக்கும்
அரங்கன் யான் பூரண துணையாய் இருக்கின்றேன்

16. இவர்களுக்கு பயண பாதுகாப்பும்
இவர்களுக்கு வந்து செல்லும் தடங்களில்
எல்லா பாதுகாப்பும் கூட்டி
இனிதே அரங்கன் யான் உடனிருக்கின்றேன்

17. ஆகவே இந்தவித அறையில்
அரங்கன் என் சக்தி நிரம்பியிருக்க
இவை தடத்தில் வந்து ஆசிபெற்று
எவர் முழுசரணாகதியோடு தர்மத்தில்

18. பொருளுதவி செய்து கொண்டு
செல்கின்றாரோ அவர்கட்கெல்லாம்
தனமுடை அத்தனை தடைகளையும் நீக்கி
அரங்கன் யான் அவர்கள் தனவளமும்

19. பொருள்வளமும் புண்ணியபலத்தோடு ஆயுள்பலமும்
இவை பிறவியில் இனி பிறவாத
பெரும் பேற்றுக்குண்டான ஞானபலமும்
அரங்கன் யான் பரிபூரணமாய்

20. தந்து அருள் புரிகின்றேன்
அருளவே என் தடம் வந்தோர்க்கு
அகிலத்தில் பேராற்றலும் சக்தியும்
இந்த பிரபஞ்சத்தில் மகா சக்தியாக

21. குருவின் என்னருள் பரிபூரணமாய் இருக்க
அவர்களெல்லாம் குருவருளோடு திருவருளைப் பெற்று
இனி பிறவா பெரும்பேறு கண்டு சிறப்பர்
அரங்கன் என்னருளால் இந்த நன்னாளில்

22. குடிலில் அவரவர்க்கும்
அவரவர் சரணாகதிக்கு தக்கவாறு
மகா சூட்சுமமும் மகா காட்சியும் வரமும்
பரிபூரணமாய் உண்டு உண்டு அரங்கன் யான் அருளிய
பொதுநூல் ஆசி விளக்கம் முற்றும் முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி